# அஜித்குமார் அடித்துக் கொலை.. நடந்தது என்ன? நீதிபதிகள் காட்டம்! உடற்கூராய்வு பேரதிர்ச்சி!

**Ajit Kumar Custodial Death Report:** மடப்புறம் கோவில் காவலாளி உயிரிழந்தது தொடர்பான பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகி வருகிறது. கொலை செய்யப்பட்ட அஜித்குமாரின் உடலில் 44 இடங்களில் காயம் உள்ளது. சிசிடிவி காட்சிகள் காணாமல் போனது, விசாரணை முறையின் பின்விளைவுகள் குறித்து நீதிபதிகள் கடுமையாக கேள்விகள் எழுப்பியுள்ளன. மதுரை உயர்நீதிமன்றம் உடனடியாக நீதி விசாரணை நடத்த உத்தரவிட்டு உள்ளது.

**Written by - Shiva Murugesan | Last Updated : Jul 2, 2025, 03:43 PM IST**



**Tamil Nadu Crime Latest News:** மடப்புறம் கோவில் காவலாளி அஜித்குமார் (28) கொடூரமாக அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற பிரேத பரிசோதனை அறிக்கை அதிர்ச்சி அளிப்பதாக நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். இந்த வழக்கில் மதுரை மாவட்ட நீதிபதி உடனடியாக நீதி விசாரணையை தொடங்க உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. அஜித்குமார் கொலை செய்யப்பட்ட வழக்கின் பின்னணி என்ன? இளைஞர் அஜித்குமாரை கொடுமையாக தாக்கியதற்கு பின்புலத்தில் இருப்பது யார்? முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் சிறப்பு பிரிவு போலீசார் வழக்கை கையில் எடுத்தது எப்படி? தாக்குதல் நடத்தப்பட்ட கோவிலில் உள்ள சிசிடிவி காட்சிகள் எங்கே? என நீதிபதிகள் சரமாரி கேள்வி கனைகளை எழுப்பி உள்ளனர். கல்வி அறிவுள்ள இந்த காலத்தில் இதுபோன்ற தாக்குதல் வியப்பாக உள்ளது என்று நீதிபதிகள் கவலை தெரிவித்ததன். பின்னணி என்ன? போன்ற விவரங்களை பார்ப்போம்.

மடப்புறம் கோவில் காவலாளி உயிரிழந்தது தொடர்பான பொதுந வழக்கு உயர்நீதிமன்ற மதுரைக்கிடையில் விசாரணைக்கு வந்தது. நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியன் மற்றும் மரியா கிளீட் அமர்வு முன்பு விசாரணை நடைபெற்றது. அப்போது உடற்கூராய்வு தொடங்குவதற்கு முன்பு அஜித்குமாரின் உடலை முழுமையாக பார்க்க, அவரது தாய் மற்றும் சகோதரரை அனுமதிக்கவில்லை என்று வழக்கறிஞர் ஹென்றி திபேன் தெரிவித்தார். நகை திருட்டு தொடர்பாக புகார் கொடுத்த நிகிதா என்பவர் ஒரு ஐஏஎஸ் அதிகாரியின் நெருங்கிய உறவினர் என்றும், அதனால் தான் முறையாக விசாரணை நடத்தாமல் இளைஞர் தாக்கப்பட்டதாகவும் ஹென்றி திபேன் வாதிட்டார்.

மேலும் தனிப்பிரிவு காவலர்களிடம் அடித்து விசாரியுங்கள் என்று காவல் ஆய்வாளர் மற்றும் டிஎஸ்பி கூறியதாக வழக்கறிஞர் மாரிஸ்குமார் குற்றம் சாட்டி உள்ளார். எனவே அவர்கள் மீதும் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்றும் கூறினார். இதனை அடுத்து புலன் விசாரணை நடத்துவதுதான் போலீசாரின் வேலை என்று சுட்டிக்காட்டிய நீதிபதிகள், ஏன் காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்கவில்லை என்று கேள்வி எழுப்பினர்.

காவல் நிலையத்தில் சிசிடிவி கேமரா வேலை செய்கிறதா என்று கேட்ட நீதிபதிகள் சிசிடிவிகளில் பதிவாகி விடக்கூடாது என்பதற்காக வெளியிடத்தில் வைத்து அடித்தார்களா என்றும் காட்டமாக கேள்வி எழுப்பினார். மேலும் நீதிபதிகளின் உத்தரவை அடுத்து இளைஞரின் உடலை உடற்கூராய்வு செய்யப்பட்டதன் இடைக்கால அறிக்கையை, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையின் முதல்வர் அருள் சுரேஷ்குமார் தாக்கல் செய்தார்.

அதில் அஜித்குமாரின் உடலில் 44 இடங்களில் காயம் இருந்ததாகவும், கடும் சித்திரவதை செய்ததற்கான அடையாளங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டு உள்ளது. அதில் குறைந்தது 18 வெளிப்புற காயங்கள் உடலில் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. காயங்கள் மண்டையோடு தொடங்கி கை, முதுகு, கால்கள் என உடல் முழுவதும் இருந்துள்ளன.

மேலும் முகம் அந்தரங்க உறுப்பிலும் மிளகாய் பொடியை தூவி துன்புறுத்தியதும் அம்பலமாக இருக்கிறது. இதனால் உட்புற உறுப்புகளில் காயம், இரத்த கசிவு ஏற்பட்டு மரணம் நிகழ்ந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இதனை கேட்டு அதிர்ச்சி அடைந்த நீதிபதிகள் மாநிலம் தன் குடிமகனையே கொலை செய்துள்ளது என்று வேதனை தெரிவித்தனர். எனவே இளைஞர் அஜித்குமார் மரணத்திற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறிய நீதிபதிகள் பொதுமக்களை பாதுகாக்கத்தான் காவல்துறை உள்ளது. தாக்குவதற்கு அல்ல என்றும் சுட்டிக்காட்டினார்.

போலீசார் வானத்திலிருந்து வந்தவர்கள் அல்ல என்பதால், அவர்கள் அரசியலமைப்பு படி நடக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். கோவிலில் உள்ள சிசிடிவி காட்சிகளை காவலர் ராமச்சந்திரன் எடுத்துச் சென்றதற்கு யார் பொறுப்பு என்றும் கேள்வி எழுப்பினார்.

இதனிடையே அஜித்குமாரை போலீசார் சுற்றி வளைத்து தாக்கிய வீடியோ வெளியான நிலையில், அதை படமெடுத்த கோவில் பணியாளரும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் கோவில் கழிவறையிலிருந்து மறைந்திருந்து போலீசார் தாக்கியதை படம் பிடித்ததாக சாட்சி அளித்துள்ளார்.

கல்வி அறிவுள்ள இந்த காலத்தில் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தது வியப்பாக உள்ளது என்று குறிப்பிட்ட நீதிபதிகள், இனிவரும் காலங்களில் போலீஸ் அதிகாரிகள் இதுபோன்று செயலில் ஈடுபடக்கூடாது என்று அறிவுறுத்தினார்.

இதனை எடுத்து கோவில் காவலாளி மரணம் தொடர்பாக மதுரை மாவட்ட நீதிபதி உடனடியாக நீதி விசாரணையை தொடங்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அதன்படி மதுரை மாவட்ட நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ் இந்த வழக்கு தொடர்பாக விசாரணை நடத்துவார் என்றும் அவரிடம் வழக்கு தொடர்பான ஆவணங்களை திருப்புவனம் காவல் ஆய்வாளர் மற்றும் சிவகங்கை எஸ்பி வழங்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை வருகிற ஜூலை எட்டாம் தேதிக்கு ஒத்தி வைத்தனர்.

நீதி விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதால் குற்றம் சாட்டப்பட்ட போலீசார் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வழக்கறிஞர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

https://zeenews.india.com/tamil/tamil-nadu/sivagangai-ajit-kumar-custodial-death-autopsy-report-highlights-and-what-happened-in-madurai-high-court-595657